22-09-2026 காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

## இனிமையான குழந்தைகளே! நீங்கள் அறிவாளியாக ஆகி உள்ளீர்கள் என்றால் சம்பாத்தியத்தில் மிக மிக ஆர்வம் இருக்க வேண்டும். தொழில் ஆகியவற்றிலிருந்து கூட நேரத்தை ஒதுக்கி தந்தையை நினைவு செய்து கொண்டிருந்தீர்கள் என்றால் சம்பாத்தியம் ஆகிக் கொண்டே இருக்கும்.

கேள்வி: எப்பொழுதுமே கிடைக்காத எந்தவொரு அப்பேர்ப்பட்ட ஸ்ரீமத் குழந்தைகளாகிய உங்களுக்கு இப்பொழுது கிடைக்கிறது?

பதில்: (1) இனிமையான குழந்தைகளே! அதிகாலை எழுந்து தந்தையின் நினைவில் அமர்ந்தீர்கள் என்றால் முழு ஆஸ்தி கிடைக்கும் என்று இச்சமயத்தில் தந்தை உங்களுக்கு ஸ்ரீமத் கொடுக்கிறார். (2) இல்லற விவகாரங்களில் இருந்தாலும் தாமரை மலர் போல இருங்கள் என்ற அப்பேர்ப்பட்ட ஸ்ரீமத் மற்ற சத்சங்கங்களில் ஒரு பொழுதும் கிடைக்க முடியாது. அந்த சத்சங்கங்களில் தந்தை மற்றும் ஆஸ்தியின் வி˜யம் கிடையாது.

பாடல்: தந்தையும் நீயே, தாயும் நீயே.. .. ..

ஓம் சாந்தி. பாரதத்தில் குறிப்பாக மற்றும் பொதுவாக முழு உலகத்தில் அநேக விதமான சத்சங்கங்கள் இருக்கின்றன. நாம் ஆஸ்தியை அடைந்து கொண்டிருக்கிறோம் என்பது மனிதர் களின் புத்தியில் இருக்கும் வகையில் அப்பேர்ப்பட்ட எந்த ஒரு சத்சங்கம் அல்லது சர்ச் அல்லது கோவிலும் கிடையாது. இங்கு குழந்தைகளாகிய நீங்கள் அமர்ந்துள்ளீர்கள். நாம் நமது தந்தையிடமிருந்து சுகதாமத்தின் ஆஸ்தியைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்ற சிந்தனை யுடன் எல்லா சென்டர்களிலும் தங்களுடைய எல்லையில்லாத தந்தையின் நினைவில் அமர்ந்துள்ளார்கள். இது போல வேறு எந்த சத்சங்கம் மற்றும் சர்ச் ஆகிய இடங்களில் புரிந்திருக்க மாட்டார்கள். குழந்தைகளாகிய உங்களுடைய புத்தியில் தான் உள்ளது. நாம் எல்லையில்லாத தந்தையின் நினைவில் அமர்ந்துள்ளோம் என்பதை குழந்தை களாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். புதிய உலகமான சொர்க்கத்தின் ஆஸ்தியை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இத்தனை ஏராளமான குழந்தைகள் விருத்தி அடைந்து கொண்டே இருக்கிறார்கள். அதிகாலை எழுந்து தந்தையை நினைவு செய்யுங்கள் என்று அனைவருக்கும் ஸ்ரீமத் கிடைக்கிறது. நாம் பாபாவிடமிருந்து இந்த

ஆஸ்தியைப் பெறக் கூடியவர்கள் ஆவோம். நாம் அந்த தந்தை யினுடையவராக ஆகி உள்ளோம். தந்தையிடமிருந்து ஆத்மாவிற்கு இப்பொழுது அறிமுகம் கிடைத்துள்ளது. என்னை நினைவு செய்யுங்கள் என்று தந்தை வழிகாட்டுகிறார். மேலும் இல்லற விவகாரங்களில் இருந்தபடியே தாமரை மலர் போல தூய்மையாக இருங்கள். எல்லோருமே இங்கு வந்து அமர வேண்டியதில்லை. பள்ளிக் கூடத்தில் படித்து விட்டு பின்பு அவரவர் வீட்டிற்குச் சென்று விடுகிறார்கள். ஒவ்வொரு பெண் குழந்தையும் ஆண் குழந்தையும் தங்களுடைய ஆசிரியரிடமிருந்து ஆஸ்தியைப் பெற முடியும். இதுவும் அவ்வாறே ஆகும். தினமும் படித்து விட்டு பிறகு வீட்டிற்குச் சென்று தாராளமாக தொழில் ஆகியவைகளைச் செய்யுங்கள். நீங்கள் இல்லற விவாகரங் களிலும் இருக்கிறீர்கள். பிறகு மாணவர்களும் ஆவீர்கள். இல்லற விவகாரங்களில் இருந்தபடியே தாமரை மலர் போல ஆக வேண்டும். இது போல எந்த சந்நியாசி ஆகியோரும் கூறுவதில்லை. இங்கு நீங்கள் பிராக்டிகலாக (நடை முறையில்) அமர்ந்துள்ளீர்கள். இல்லறத் தில் இருந்தபடியே தூய்மை ஆகிறீர்கள். தூய்மையாக ஆகி பரமபிதா பரமாத்மாவை வேறு யாரும் நினைவு செய்வதில்லை. கீதையை கேட்கிறார்கள், படிக்கிறார்கள் என்றாலும் கூட நினைவு செய்வது இல்லை அல்லவா? சொல்வதிலும் செய்வ திலும் வித்தியாசம் உள்ளது. நமது தந்தை ஞானம் நிறைந்தவர் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர் கள். அவரிடம் முழு நாடக சக்கரத்தின் ஞானம் உள்ளது. இப்பொழுது நமக்கு ஞானம் கிடைத்துக் கொண்டி ருக்கிறது. இந்த சக்கரம் மிகவும் நன்றாக உள்ளது. இது புருஷோத்தம யுகம் ஆன காரணத்தால் உங்களுடைய இந்த ஜன்மமும் புருஷோத்தமமானது ஆகும். கூடுதலான மாதம் இருக்கிறது அல்லவா?

நாம் உண்மையில் தந்தை மூலமாக புருஷோத்தமர் ஆகிக் கொண்டிருக்கிறோம் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். நாம் மீண்டும் மரியாதை புருஷோத் தமராக ஆகிக் கொண்டிருக்கிறோம். மீண்டும் 84ன் பிறவி சக்கரத்தை சுற்றுவோம் என்னும் ஞானம் புத்தியில் உள்ளது. வேறு எந்த சத்சங்கத்திலும் இதை புரிய வைப்பதில்லை. நாம் இது போல ஆக வேண்டும் என்பதை நீங்கள் புரிந்துள்ளீர்கள். அவ்வாறு ஆக்குபவர் ஒரே ஒரு தந்தை ஆவார். இந்த இலட்சுமி நாராயணரின் படத்தின் மீது நீங்கள் மிகவும் நல்ல முறையில் புரிய வைக்க முடியும். உண்மையில் பிரம்மா மூலமாக யோக பலத்தினால் இவர்கள் இந்த பதவியை அடைந்துள்ளார்கள். இது போல புத்தியில் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். பிரம்மா சரஸ்வதி, இலட்சுமி நாராயணரின் இரண்டு ரூபங்கள் காண்பித் துள்ளார்கள். பிரம்மா சரஸ்வதி பிறகு பிரஜைகளும் காண்பிக்க வேண்டி இருக்கும். ஒவ்வொரு

விஷயத்தின் மீதும் நல்ல முறையில் சிந்தனை செய்ய வேண்டும். என்னை நினைவு செய்யுங்கள் என்று தந்தை கூறுகிறார். என்னை நினைவு செய்தீர்கள் என்றால் இது போல ஆவீர்கள் என்று பிரம்மா விற்கும் கூறுகிறார். அதாவது என்னை நினைவு செய்யுங்கள் என்று பிரம்மா வாய்வழி வம்சத்தினர் அனைவருக்கும் கூறுகின்றார். எப்படி நினைவு செய்ய வேண்டும் என்பது புத்தியில் உள்ளது. படங்களும் முன்னால் வைக்கப் பட்டுள்ளது. இவற்றின் மீது புரிய வைப்பது மிகவும் சுலபம் ஆகும். தந்தையின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். கண்காட்சியில் இது பற்றிப் புரிய வையுங்கள். உண்மையில் இவர் அனைவரின் எல்லையில்லாத தந்தை ஆவார் என்ற நிச்சயம் ஏற்படுகிறது. இந்த கணக்குப்படி நமக்கு எல்லையில்லாத ஆஸ்தி கிடைக்க வேண்டும். நிராகாரி ஆத்மாக்களாகிய நாமோ சகோதர சகோதரர்கள் ஆவோம். சாகாரத்தில் வரும் பொழுது நாம் சகோதர சகோதரி ஆகிறோம். அப்பொழுது தான் படிக்க முடியும். பிரம்மாவின் குழந்தைகள் தான் சகோதர சகோதரி ஆகிறார்கள். ஆஸ்தி தந்தையிடமிருந்து கிடைக்கிறது. இதை புத்தியில் பதிய வைக்க வேண்டும். யாருக்கு வேண்டுமானாலும் புரிய வையுங்கள். முதலில் தந்தையின் அறிமுகம் கொடுங்கள். நாம் சகோதரர்கள் ஆவோம். சர்வவியாபி என்று கூறினால் எல்லோரும் தந்தை ஆகி விடுகிறார்கள். பின் தந்தையர் களுக்கு ஆஸ்தி எங்கிருந்து கிடைக்கும். தந்தை தந்தை என்று கூறி விழுந்து கொண்டே வந்துள்ளார்கள். ஆஸ்தி எதுவும் இல்லை. இப்பொழுது சகோதரத்துவம் என்று உணரும் பொழுது தான் ஆஸ்தி கிடைக்கும். எனவே அது பற்றி நல்ல முறையில் புரிய வைப்பதால் புத்தியில் பதிந்து விடும். அஷ்ட தேவதைகள் போன்ற விஷயங்கள் எல்லாம் நீங்கிப் போய் விடும். இரண்டு தந்தையர்கள் உள்ளார்கள் என்று கூறுங்கள். எந்த ஒரு ஆன்மீக தந்தையிடமிருந்து அனை வருக்கும் சத்கதி கிடைக்கிறதோ, அவரே சுகம் சாந்தியின் ஆஸ்தி கொடுக்கிறார். எல்லோருமே சுகமுடையவர்களாக ஆகி விடுகிறார்கள். அவருக்கு ஹெவென்லி காட் ஃபாதர், சொர்க்கத்தை படைப்பவர் என்று கூறப்படுகிறது. முதலில் தந்தையின் தாக்கத்தை புத்தியில் பதிய வைக்க வேண்டும். இவர் ஆத்மாக்களின் எல்லையில்லாத தந்தை ஆவார். அவருக்கு பதீத பாவனர் என்று கூறுகிறார்கள். ஆத்மாவாகிய நீங்கள் பரமபிதா பரமாத்மாவின் குழந்தைகள் ஆவீர்கள். இந்த நிச்சயத்தைப் பக்குவப்படுத்துங்கள். அடிப்படை விஷயமான இதை முதலில் புத்தியில் பதிய வைக்க வேண்டும். இதை புரிந்து கொண்டீர்கள் என்றால் குஷியின் அளவு அதிகரிக்கும். மேலும் நாங்கள் தந்தையை அவசியம் நினைவு செய்வோம் என்று கூறுவார்கள். நாம் தந்தையை நினைவு செய்து உலகத்தின் அதிபதி ஆகிடுவோம் என்று எங்களுக்கு நிச்சயம் ஏற்படுகிறது. இந்த குஷி நிறைய இருக்கும். அறிவுள்ளவராக

இருக்கிறார். மேலும் புத்தியில் முழுமையாக நிச்சயம் இருந்தது என்றால் முதலில் தாதாவில் (பிரம்மா) இது போல வரக் கூடிய எல்லையில்லாத தந்தையை சந்திக்க வேண்டும் என்று கூறுவார். சிவபாபா பிரம்மா மூலமாகத் தான் நம்மிடம் பேச முடியும். ஆத்மாவாகிய நீங்கள் அவரை சந்திக்கவில்லை என்றால் எப்படி நினைவு செய்ய முடியும். குழந்தைகள் தத்து எடுக்கப்பட்டால் தான் நினைவு இருக்கும். தத்து எடுக்கப்படவே இல்லை என்றால் எப்படி நினைவு இருக்கும்? முதலில் அவருடையவர் ஆகுங்கள். அப்பேர்ப்பட்ட தந்தையை உடனே சந்திக்க வேண்டும். நீங்கள் தங்களை ஆத்மா என்று நினைக் கிறீர்களா என்று தந்தையும் கேட்பார். நான் ஆத்மாக்களாகிய உங்களுடைய தந்தை ஆவேன். சிவபாபா உங்களிடம் உரையாடிக் கொண்டிருக்கிறார். எனது ஆத்மாவின் தந்தையே உங்களுடைய தந்தையும் ஆவார். உண்மையில் அனைத்து ஆத்மாக் களின் தந்தை ஒரே ஒருவர் ஆவார் என்று உங்களுக்கு நிச்சயம் உள்ளதா? என்று பாபா கேட்கிறார். அவரே தான் ஆஸ்தி அளிப்பார். தூய்மையாகவும் ஆக வேண்டும். அவரைத் தவிர மற்ற அனைத்தையும் மறந்து விட வேண்டும். ஆத்மாவாகிய நீங்கள் வீட்டிலிருந்து தனியாக வந்திருந்தீர்கள் அல்லவா? எந்த ஒரு தேக சம்பந்தமும் இருக்க வில்லை. ஆத்மா சரீரத்தில் பிரவேசம் செய்து பெரியவர் ஆகும் பொழுது தான் இவர் உங்களது தந்தை ஆவார். இவர் இன்னார் ஆவார் என்று அவருக்கு புரிய வைக்கப்படுகிறது. ஆத்மாவோ அனைத்து சம்பந்தங் களிலிருந்தும் விலகியது ஆகும். ஆத்மா சென்று விட்டால் நீங்கள் இறந்தால் உலகமே இறந்து விட்டது என்று கூறப்படுகிறது. இன்னொரு உடல் கிடைக்கும் வரையும் பந்தனமற்றதாக ஆகி விடுகிறது. தாயின் கர்ப்பத்தில் சென்று வெளியில் வந்த பிறகு அறிவுள்ளவர் ஆகும் பொழுது தான் சம்பந்தத்தின் விஷயமே வருகிறது. எனவே இங்கு குழந்தைகளாகிய நீங்கள் புரிய வைக்க வேண்டும். உயிருடனிருந்தே அனைத்தையும் மறந்து விட வேண்டும். ஒரு தந்தையை நினைவு செய்வது - இது கலப்படமற்ற நினைவு ஆகும். இதற்குத் தான் யோகம் என்று கூறப் படுகிறது. இங்கு மனிதர்களுக்கு அநேகரின் நினைவு இருக்கும். உங்களுடையது கலப்பட மற்ற நினைவு ஆகும். இதற்கு தான் யோகம் என்று கூறப்படுகிறது. இந்த சரீரத்தின் சம்பந்தங்கள் அனைத்தும் முடியப் போகிறது என்பதை ஆத்மா அறிந்திருக்கிறது. நமது சம்பந்தம் ஒரு தந்தையுடன் உள்ளது. தந்தையை எந்த அளவிற்கு நினைவு செய்வீர்களோ, விகர்மங்கள் விநாசமாகும். நண்பர்கள், உறவினர்களை நினைவு செய்வதால் ஏதாவது விகர்மம் ஆகி விடும் என்பதும் அல்ல. இல்லை. ஏதாவது அப்பேர்ப்பட்ட தவறான செயல் செய்வதால் தான் விகர்மம் ஏற்படும். மற்றபடி வேறு யாரையோ நினைவு செய்வதால் விகர்மம் ஆகாது. ஆம்.

நேரம் அவசியம் வீணாகும். ஒரு தந்தையை நினைவு செய்வதால் விகர்மங்கள் விநாசம் ஆகும். இது பாவங்களை அழிப்பதற்கான யுக்தி (வழி முறை) ஆகும். மற்றபடி சம்பந்தங்கள் ஆகியவையோ நினைவு இருக்கும். சரீர நிர்வாகத்தின் பொருட்டு தொழில் ஆகியவை எல்லாம் செய்யுங்கள். ஆனால் எவ்வளவு நேரம் கிடைக்கிறதோ அவ்வளவு நேரம் நினைவு செய்துக் கொண்டே இருங்கள். அப்பொழுது துரு நீங்கி போய் விடும். அடிப்படை விஷயமே இது தான். பதீத நிலை யிலிருந்து பாவனம் எப்படி ஆவது என்பதை உள்ளுக்குள்ளேயே சிந்தனை செய்யுங்கள். தந்தையை நினைவு செய்ய வேண்டி உள்ளது. இல்லற விவகாரங்களில் இருக்க வேண்டும். சந்நியாசிகளும் சரீரத்தை விட்டு பின்னர் குடும்பஸ்தர்களிடம் போய் ஜென்மம் எடுக்கிறார்கள். அப்படியின்றி ஜன்ம ஜன்மாந்திரத்திற்கு பாவனம் ஆகி விடுகிறார்கள் என்பதல்ல. இப்பொழுது நிர்விகாரி உலகமோ கிடையாது. இது விகாரி உலகம் ஆகும். இதிலிருந்து யாரும் வெளியேற முடியாது. விகாரி உலகத்தில் இருக்கும் காரணத்தால் ஏதாவது குறைகள் அவசியம் இருக்கும். மற்றபடி உலகம் இருப்பது இரண்டு. விகாரி உலகம் மற்றும் நிர்விகாரி உலகம். பாவன உலகத்தில் தேவதைகள் இருந்தார்கள். எனவே புரிய வைப்பது மிகவும் சுலபமாக இருக்கும். இந்த பதீத உலகம் இப்பொழுது அழியப் போகிறது. விநாசம் ஆவதற்கு முன்பே எல்லை யில்லாத தந்தை யிடமிருந்து ஆஸ்தி பெற வேண்டும். தேகத்தின் சம்பந்தத்தை விடுத்து தன்னை ஆத்மா என்று நிச்சயம் செய்யுங்கள். மேலும் தந்தையை நினைவு செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் பாவனமாக ஆகி விடுவீர்கள். நீங்கள் என்னை பதீத பாவனர் என்று கூறுகிறீர்கள் அல்லவா? என்று தந்தை கூறுகிறார். கங்கையில் முழுக்கு போடுபவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால் பாவனம் ஆகி விடுவார்களா என்ன? கண்காட்சியில் மிகவும் நல்ல முறையில் புரிய வைக்க வேண்டியுள்ளது. பிரஜாபிதாவோ இங்கு தான் வேண்டும். கீழே இந்த பிரம்மா மற்றும் பிரம்மாகுமார் குமாரிகள் தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த விஷயங்களை நல்ல முறையில் புரிய வைக்க வேண்டும். எவரொருவருக்கும் ஆணித் தரமாக புரிய வைக்க வேண்டும். திக்கி திணறி கூறினார்கள் என்றால் பெயரை கெடுத்து விடுவார்கள். எங்காவது நாம் குழம்புகிறோம் என்று பார்த்தீர்களானால் சரி கொஞ்சம் இருங்கள், நாங்கள் இன்னொரு சகோதரியை அனுப்புகிறோம் என்று கூறுங்கள். ஒருவரை விட ஒருவர் கூர்மையாக இருப்பார்கள் அல்லவா? கண்காட்சி மேளாவில் சரியாகப் புரிய வைக்கிறார்களா என்று மேற்பார்வையும் செய்ய வேண்டும். யாரும் வாதாடுவ தில்லையே? நுழைவாயிலில் அறிமுகம் உடையவர் இருக்க வேண்டும். அநேக விதமானோர் வருகிறார்கள் அல்லவா? பெரிய மனிதர்களுக்கு

அவசியம் மதிப்பு கொடுப்பார்கள். வித்தியாசமோ அவசியம் இருக்கும். இதில் இவர் மீது அன்பு இருக்கிறது. இவர் மீது இல்லை என்று வரக் கூடாது. இரண்டு விதமான பார்வை இருக்கிறது என்பதல்ல. இதற்கு இரண்டு விதமான பார்வை என்று கூறப் படுவதில்லை. இங்கு பெரிய மனிதர்களுக்கு உபசாரம் செய்யப்படுகிறது என்று நினைக் கிறார்கள். சேவை செய்யக் கூடியவர்களுக்கு உபசாரம் செய்வார்கள் அல்லவா? யாராவது வீடு கட்டினார் என்றால், அவசியம் உபசாரம் செய்வார்கள். உங்களுக்காகத் தானே வீடு அமைக் கிறார்கள் ! யார் உழைத்து ராஜா ஆகிறார் களோ அவர்களுக்கு பிரஜைகள் இயல்பாகவே உபசாரம் செய்வார்கள் அல்லவா? குறைந்த பதவி உடையவர்களை விட உயர்ந்த பதவி உடையவர்களுக்கு உபசாரம் கிடைக்கும் அல்லவா? முழு உலகத்தில் ஆத்மாக்கள் எல்லை யில்லாத தந்தையின் குழந்தைகள் ஆவார்கள். ஆனால் பாரதத்தில் ஜன்மம் எடுத்துள்ளார். முதலில் உயர்ந்தவர்களாக இருந்த பாரதவாசிகள் இப்பொழுது தாழ்ந்தவர்களாக ஆகி விட்டுள்ளார்கள். எனவே நான் படிப்பிக்க வந்துள்ளேன் என்று தந்தை கூறுகிறார். நான் பாரதத்தில் வரும் பொழுது எல்லோருக்கும் நன்மை ஆகி விடுகிறது. குறிப்பாக மற்றும் பொதுவாக என்று இருக்கிறது அல்லவா? இப்பொழுது பாரதம் நரகமாக உள்ளது. பிறகு சொர்க்கம் ஆகப் போகிறது. எனவே பாரதத்தில் தான் வருவார் அல்லவா? வேறு இடங்களுக்கு போய் என்ன செய்வார். பாரதத்தில் பக்தி மார்க்கத்தில் முதன் முதலில் சோமநாத்தின் பெரிய மேன்மையான கோவில் அமைத்திருந்தார்கள். எப்படி வெளி நாடுகளில் பெரியதிலும் பெரிய சர்ச் அமைக்கிறார்கள். ஏனெனில் போப் மூலமாக பெறப்பட்ட இராஜ்யம் ஆகும். எல்லா சர்ச்களும் ஒன்று போல இருப்பதில்லை. வரிசைக்கிரமமாகவே இருக்கும் அல்லவா? சோமநாத் தின் கோவில் எவ்வளவு வைரம் வைடூரியங்களால் நிரம்பி இருந்தது. முகம்மதியர்கள் ஆகியோர் கொள்ளையடித்து விட்டுச் சென்றார்கள். மிகவும் செல்வந்தர்களாக இருந்தார்கள் சர்ச்லிருந்து என்ன கொள்ளையடிக்க முடியும். மனிதர்கள் பணத்திற்கு பின்னால் போகிறார்கள். கஜினி முகம்மது எவ்வளவு எடுத்துக் கொண்டு சென்றார். பிறகு ஆங்கிலேயர்கள் வந்தார்கள். அவர்களும் இங்கிருந்து பணத்தை அவர்கள் நாட்டிற்கு அனுப்பிக் கொண்டே சென்றார்கள். நிறைய செல்வம் எடுத்துக் கொண்டு சென்றார்கள். இப்பொழுது அது உங்களுக்கு திரும்பக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. கோடிக்கணக்கான ரூபாய்கள் கொடுக்கிறார்கள். இவை எல்லாம் நேரம் வரும் பொழுது கிடைத்துக் கொண்டிருக்கிறது. கணக்கு இல்லை என்றால் இவ்வாறு எப்படி நடக்கும். இந்த நாடகம் எப்படி அமைக்கப்பட்டுள்ளது என்று தந்தை புரிய வைக்கிறார். இந்த கொடுக்கல் வாங்கலின் கணக்கு எப்படி உள்ளது. பிறகும் குழந்தை களாகி நீங்கள் இப்பொழுது சொர்க்கத்தின்

அதிபதியாக வேண்டும். இந்த உலக சரித்திரம் - பூகோளம் எப்படி சக்கரம் சுற்றி வருகிறது என்பதை குழந்தைகளுக்குப் புரிய வைத்துள்ளார். பிறகும் குழந்தைகளே மன்மனாபவ என்று கூறுகிறார். இவை எல்லாமே மீண்டும் நடைபெறும். ஒவ்வொரு பொருளும் சதோ நிலையிலிருந்து தமோபிரதானமாக ஆகி விடும். பகலில் தொழிலை செய்கிறீர்கள். அந்த நேரத்தை விடுங்கள். மீதி எவ்வளவு நேரம் கிடைக்கிறதோ என்னை நினைவு செய்யுங்கள். தொழில் வேலையிலும் அவ்வப் பொழுது நேரம் கிடைக்கிறது. ஒரு சிலருடைய சேவை எப்படி இருக்கிறது என்றால் கையெழுத்து மட்டும் போட்டால் போதும். அவ்வளவு தான். இப்படி கூட மிக்வும் சுதந்திரமாக இருக்கிறார்கள். பிறகும் இரவோ நம்முடையது தான். பகலில் சரீர நிர்வாகத் திற்காக சம்பாத்தியம் செய்கிறீர்கள். இரவில் பிறகு இந்த சம்பாத்தியம் செய்யுங்கள். இது வருங்கால 21 பிறவிகளுக்கானது ஆகும். ஒரு நாழி அல்லது அரை நாழி கூடுமானவரையும் தந்தையின் நினைவில் இருந்தீர்கள் என்றால், உங்களுக்கு நிறைய சம்பாத்தியம் ஆகும். அறிவுள்ளவராக யார் இருக்கிறார்களோ அவர்கள் உண்மையில் நிறைய சம்பாத்தியம் செய்ய முடியும் என்பதை உணர்ந்திருப்பார்கள். நாங்கள் இவ்வளவு நேரம் நினைவு செய்தோம் என்று ஒரு சிலர் சார்ட் எழுதுகிறார்கள். அஞ்ஞான காலத்தில் ஒரு சிலர் தங்கள் தினசரியை எழுது கிறார்கள். நீங்களும் சார்ட் எழுதினீர்கள் என்றால் கவனம் இருக்கும். எந்த ஒரு நேரமும் வீணாகி விடுவது இல்லையே? எந்த ஒரு விகர்மமும் செய்யவில்லையே? நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. வேற்றுமையின் பாவனையை நீக்கி அனைவர் மீதும் மதிப்பு கொள்ள வேண்டும். எவரொருவருக்கும் உள்ளப்பூர்வமாக புரிய வைக்க வேண்டும். சம்பாத்தியத்தில் மும்முரமாக இருக்க வேண்டும்.

2. உயிருடனிருந்தே அனைத்தையும் மறந்து ஒரு தந்தையை நினைவு செய்ய வேண்டும். சரீர நிர்வாகத்தின் பொருட்டு கர்மம் செய்ய வேண்டும். கூடவே அறிவுள்ளவர் ஆகி அழியாத சம்பாத்தியமும் சம்பாதிக்க வேண்டும். நினைவின் சார்ட் வைக்க வேண்டும்.

வரதானம் : சம்பூர்ண நிலை மற்றும் பதவி மூலமாக எப்பொழுதும் உயர்ந்த காரியத்தை செய்யக்கூடிய தந்தைக்கு சமானமானவர் ஆவீர்களாக.

நான் ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு செகண்டும் ஒவ்வொரு செயலும் செய்யும்பொழுதும், நான் மேடையில் இருக்கிறேன் என்ற நினைவு எப்பொழுதும் இருந்தது என்றால் ஒவ்வொரு செயலின் மீதும் அட்டென்ஷன் வைத்திருக்கும் பொழுது சம்பூர்ண நிலைக்கு நெருக்கத்தில் வந்து விடுவீர்கள். கூடவே நிகழ்காலம் மற்றும் ஒவ்வொரு செயலும், சிரேஷ்டமாக இருக்கும். இதே இரண்டு நினைவுகள் உங்களை தந்தைக்கு சமானமாக ஆக்கிவிடும். சமமான நிலையில் வருவதன் மூலமாக ஒருவர் மற்றவரின் மனதின் எண்ணங்களை சுலபமாகவே கிரகித்துக் கொள்ள முடியும். இதற்காக எண்ணங்களை கட்டுப்படுத்தும் சக்தி மட்டும் தேவை. தனது சங்கல்பங்களின் கலப்படம் இல்லாதிருக்க வேண்டும்.

சுலோகன்: இச்சைகளே பொறாமை மற்றும் அப்ராப்திக்கான காரணமாகும்.

எங்கு அனைத்து பிராப்திகள் உள்ளனவோ அங்கு மகிழ்ச்சி இருக்கும்.

அவ்யக்த இஷாரே: இப்பொழுது தனது வள்ளல் சொரூபத்தை வெளிப்படுத்துங்கள்

ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு எண்ணத்திலும் ஏதாவது கொடுத்தேனா, எதையும் வாங்கவில்லையே என்று செக் செய்யுங்கள். கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். பெறுவதாக இருந்தால் தந்தையிடம் பெறுங்கள். அதுவோ அடைந்து விட்டீர்கள். இப்பொழுது வழங்க வேண்டும். எந்த அளவுக்கு வழங்குவதில் மும்முரமாக இருப்பீர்களோ பின் எந்த ஒரு விஷயத்தையும் கடந்து செல்வது கடினமானதாக தோன்றாது. எல்லா விஷயங்களுமே மிகவுமே சுலபமானதாக ஆகிவிடும். ஏனெனில் மகாதானி ஆவதால் மகான் சக்தியின் பிராப்தி இயல்பாகவே ஆகிறது.